## மாற்ற அறிக்கையை முன்வைப்பதற்கான ஆலோசனைகள்

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் பின்வரும் வழிமுறைகளை கவனமாகப் படிக்கவும்.

### விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள்

1. இந்த அறிவிப்பு மூலப் பதிவுச் சான்றிதழுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. வேறுபாடு, வேறுபாடுகள் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
   உதாரணம்: வியாபரத்தின் தன்மையை மாற்றதைல், வியாபாரத்தின் முகவரி மாற்றுதல் போன்றவை
3. அறிக்கை ஒரு நபரால் சமர்ப்பிக்கப்பட்டால், அதில் அவர் கையெழுத்திட வேண்டும்.
4. பற்குடமை வியாபாரமாயின் , அதன் அனைத்து பங்குதாரர்களும் தனித்தனியாக தங்கள் கையொப்பங்களை இட வேண்டும்.விண்ணப்பப் படிவத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பங்காளர்களால் வெவ்வேறாக சத்தியக் கடதாசி /உறுதியுரைப் பத்திரத்னை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
5. புதிய பங்காளர்களைச் சேர்க்கும்போது, அவரின் முதலெழுத்துக் குறிக்கும் குடும்பப் பெயருடன் முழுப்பெயர், வசிக்கும் இடம், ஆகிய விபரங்கள் வழங்கப்பட வேண்டும்.
6. விண்ணப்பத்தில் புதிய பங்குதாரர் உட்பட அனைத்து பங்குதாரர்களும் கையெழுத்திட வேண்டும்.

மாற்ற அறிக்கையை முன்வைக்கும் போது பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்கள்

I. பீஎன்ஆர்-05 படிவம்

II. உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையினதோ செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவச்சீட்டினதோ செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்தினதோ உண்மைப் பிரதி.

III. வியாபாரம் நடைபெற்று வருகிறது என்பதற்கு கிராம அலுவலரின் அறிக்கை (இதில் பிரதேச செயலரளர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.)

IV. இறுதியாக வழங்கப்பட்ட வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி நகல்.

V. பங்குடமை வியாபாரமாயின் , விண்ணப்பப் படிவத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து பங்காளர்களாலும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படும் சத்தியக்கடதாசி, உறுதியுரைச் சான்றிதழ்.

VI. வியாபார நிலையத்தின் உரிமையை மாற்றுவதை உறுதிப்படுத்தும் உறுதி அல்லது குத்தகை ஒப்பந்தம் அல்லது வாடகை ஒப்பந்தத்தின் நொத்தாரிசி ஒருவர் உறுதிப்படுத்திய பிரதி.

வியாபார நிலயத்தின் உரிமையானது வேறு உறுதியின் மூலம் வேறொரு தரப்பினருக்கு உரிமை மாற்றப்பட்டிருந்தால் , மேற்கூறிய ஆவணத்திற்கு மேலதிகமாக, விடயத்திற்குரிய சொத்தில் உரிமையுள்ள தரப்பினர் வணிகப் பெயரைப் பதிவு செய்ய சட்டப்பூர்வ அனுமதியை வழங்குகிறார்கள் அல்லது வழங்கியுள்ளனர் என்று சத்தியப் பிரமாணக் கடிதம் அல்லது உறுதியுரைப் பத்திரம் மற்றும் உரிமையுள்ள தரப்பினரின் தேசிய அடையாள அட்டையினதோ, செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவச்சீட்டினதோ, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்தினதோ ஒரு பிரதி.

VII. பதிவாளரால் சந்தர்ப்பத்திற்கேற்ப அழைக்கக் கூடிய அத்தகைய பிற ஆவணங்கள், ஏதேனும் இருந்தால் அவை